பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

17 08 2026 6 45

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் திருவாரூரில் உள்ள மத்திய பல்கலைக்கழகத்தின் 11-வது பட்டமளிப்பு விழாவில் இன்று பங்கேற்கிறார்.

2. கர்நாடக வனப்பகுதியில் தமிழர்கள் 3 பேர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக உயர்மட்ட விசாரணைக் குழு அமைத்து, தவறிழைத்தவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் என அம்மாநில அரசை தமிழக முதலமைச்சர் திரு. விஜய் வலியுறுத்தியுள்ளார்.

3. காவிரி மேலாண்மை ஆணையத்தின் உத்தரவுப்படி தமிழகத்திற்கு தண்ணீர் திறக்க கர்நாடகாவுக்கு உத்தரவிடுமாறு தமிழக அரசு தாக்கல் செய்த மனு, உச்சநீதிமன்றத்தில் இன்று விசாரணைக்கு வருகிறது.

4. தமிழகத்தின் சில இடங்களில் இன்று மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. உலக பேட்மிண்டன் சாம்பியன் போட்டி புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் திருவாரூரில் உள்ள மத்திய பல்கலைக்கழகத்தின் 11-வது பட்டமளிப்பு விழாவில் இன்று பங்கேற்கிறார்.

இதற்கென இன்று காலை திருச்சியில் இருந்து ஹெலிகாப்டர் மூலம் 10.30 மணியளவில் திருவாரூர் மத்திய பல்கலைக்கழகத்திற்கு செல்ல உள்ளார்.

அங்கு அவருக்கு பல்கலைக்கழகத்தின் சார்பில் வரவேற்பு அளிக்கப்படுகிறது.

அதனைத்தொடர்ந்து நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் மாணவ மாணவிகளுக்கு பட்டங்களை வழங்குவதுடன் சிறப்பிடம் பெற்ற 50 பேருக்கு தங்கப் பதக்கங்களையும் வழங்க உள்ளார்.

பின்னர் தஞ்சாவூரில் தனியார் பல்கலைக்கழகத்தின் வெள்ளி விழா நிகழ்ச்சியில் அவர் பங்கேற்க உள்ளார்.

இந்நிலையில் சென்னையில் நேற்று நடைபெற்ற மறைந்த முன்னாள் நாகாலாந்து ஆளுநர் இல. கணேசனின் முதலாமாண்டு நினைவு நிகழ்ச்சியில் குடியரசு துணைத்தலைவர் பங்கேற்றார்.

தேசத்திற்காகவே வாழ்க்கையை அர்ப்பணித்தவர் இல. கணேசன் என்று அவர் புகழாரம் சூட்டினார்.

அரசியலைத் தாண்டி தமிழ் மீதும், தமிழ் இலக்கியத்தின் மீதும் இல. கணேசன் தீவிர பற்று கொண்டிருந்ததாக திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

(Voice Byte - CPR - 55 Sec)

அதைத் தொடர்ந்து மற்றொரு நிகழ்ச்சியில் பங்கேற்ற அவர், இந்து முன்னணி நிறுவனர் ராமகோபாலன் தொடர்பான நூல் ஒன்றை வெளியிட்டார்.

இந்நூலை தமிழக ஆளுநர் திரு. ராஜேந்திர விஷ்வநாத் அர்லேகர் பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

<<<<>>>>

கர்நாடக வனப்பகுதியில் தமிழர்கள் 3 பேர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக உயர்மட்ட விசாரணைக் குழு அமைத்து, தவறிழைத்தவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் என அம்மாநில அரசை தமிழக முதலமைச்சர் திரு. விஜய் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதவில், இப்படுகொலையை வன்மையாக கண்டிப்பதாக கூறியுள்ளார்.

இதுதொடர்பாக கர்நாடக வனத்துறை கொடுத்துள்ள விளக்கம் ஏற்புடையதாக இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இனி இதுபோன்ற சம்பவம் நடக்காமல் இருக்க கர்நாடக அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று திரு. விஜய் கூறியுள்ளார்.

<<<<>>>>

திருச்சி ஸ்ரீரங்கம் கோவிலில் தயாரிக்கப்படும் அக்காரவடிசல் பிரசாதத்தை சர்வதேச அளவில் கொண்டு செல்ல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மாநில இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. ரமேஷ் தெரிவித்துள்ளார்.

திருச்சியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கோவில்களில் பிரசாதத்தை இந்துசமய அறநிலையத்துறை மூலமாகவே தயாரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

மாநிலத்தில் உள்ள முக்கியமான திருக்கோவில்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

தவெக அரசின் 100 நாள் ஆட்சியில் பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாகவும், அடுத்த 5 ஆண்டுகளில் நாட்டின் முதன்மை மாநிலமாக தமிழகத்தை மாற்ற பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்றும் திரு. ரமேஷ் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார திட்டத்தின்கீழ் நீர்நிலைகளைத் தூர்வாரும் பணி இன்று தொடங்க உள்ளது.

இதில் 10 ஆயித்துக்கும் மேற்பட்ட கால்வாய்கள், சுமார் 800 ஏரிகள் மற்றும் குளங்கள் சீரமைக்கப்பட உள்ளன.

சென்னையைத் தவிர பிற 37 மாவட்டங்களில் சுமார் 508 கோடி ரூபாய் மதிப்பில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்பாக இப்பணிகள் மேற்கொள்ளப்படுவதால் மழைநீரை முழுமையாக சேகரித்து நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்த முடியும் என நீர்வளத்துறை தெரிவித்துள்ளது.

<<<<>>>>

காவிரியில் தண்ணீர் திறக்க கர்நாடகாவுக்கு உத்தரவிடுமாறு தமிழக அரசு தாக்கல் செய்த மனு, உச்ச நீதிமன்றத்தில் இன்று விசாரணைக்கு வருகிறது.

இது தொடர்பாக தமிழக அரசு தாக்கல் செய்த மனுவில் கடந்த 30ஆம் தேதி காவிரி மேலாண்மை ஆணையம் பிறப்பித்த உத்தரவை கர்நாடக அரசு பின்பற்றவில்லை என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது தமிழகத்தில் காவிரி டெல்டா விவசாயிகளின் நலன்களை பாதித்துள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

எனவே கர்நாடகாவின் அணைகளில் நீர்வரத்து மற்றும் வெளியேற்றத்தை கண்காணித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள காவிரி மேலாண்மை ஆணையத்திற்கு உத்தரவிட வேண்டும் என்று தமிழக அரசின் மனுவில் கோரப்பட்டுள்ளது.

இந்த மனு நீதிபதி விக்ரம்நாத் தலைமையிலான அமர்வில் இனறு விசாரணைக்கு வருகிறது.

<<<<>>>>

எண்ணூர் முகத்துவார பகுதியில் கொசஸ்தலை ஆற்றில் மீன்கள் உயிரிழந்து மிதந்த சம்பவம் குறித்து தமிழக அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என தேமுதிக வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், தொழிற்சாலைக் கழிவுகளால் நீர் மாசுபட்டு மீன்கள் உயிரிழக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

நீரில் கலந்துள்ள ரசாயனக் கழிவுகளை உடனடியாக அகற்றி நீர்நிலைகளை தூய்மைப்படுத்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீர் மற்றும் மீன்களின் மாதிரிகளை ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும் என்றும், தொழிற்சாலைகளின் கழிவுநீர் வெளியேற்றத்தை அரசு கண்காணிக்க வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் தேமுதிக கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தின் சில இடங்களில் இன்று மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்கள், மதுரை, சிவகங்கை மற்றும் ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

மாநிலத்தின் பிற பகுதிகளின் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், மாலை அல்லது இரவு நேரங்களில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

**<<<<>>>>**

*இருவரிச் செய்திகள்*

இந்தோனேஷியாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 51ஆக அதிகரித்துள்ளது.

------------

பெல்ஜியத்தில் ஏற்பட்டுள்ள கடும் காட்டுத் தீ காரணமாக 27 சதுர கிலோமீட்டர் வனப் பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

------------

முன்னாள் குடியரசு துணைத்தலைவர் திரு. வெங்கையா நாயுடுவின் வாழ்க்கை வரலாற்று நூலை அவரது முன்னிலையில் மத்திய அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் புதுதில்லியில் இன்று வெளியிடுகிறார்.

------------

பொதுத்துறை வங்கிகள் மற்றும் பொதுத்துறை நிதி நிறுவனங்களின் மூத்த அதிகாரிகள் பங்கேற்கும் இரண்டு நாள் கூட்டத்தை புதுதில்லியில் மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று தொடங்கி வைக்கிறார்.

------------

மின்னணு உதிரிபாகங்கள் உற்பத்தித் திட்டத்தின் கீழ் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கும் நிகழ்ச்சி மத்திய மின்னணுவியல் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

------------

கிரேட்டர் நொய்டாவில் இன்று நடைபெறவுள்ள, தேசிய ஆசிரியர் கல்விக் கவுன்சிலின் 32-வது நிறுவன நாள் விழாவில், மத்திய கல்வி அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி பங்கேற்கிறார்.

------------

சிங்கப்பெண் அதிரடிப்படை சார்பில் திருப்பத்தூரில் இணையவழி குற்றங்கள் தடுப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

------------

ராமேஸ்வரம் அருள்மிகு ராமநாத சுவாமி திருக்கோவிலில் ஆடித் திருவிழாவையொட்டி நடைபெற்ற திருக்கல்யாண வைபவத்தில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்றனர்.

------------

திருவாரூர் நகருக்கு உட்பட்ட மேட்டுப்பாளையம் பகுதியில் 7 வீடுகளில் தீ விபத்து ஏற்பட்டதையடுத்து, தீயணைப்பு படையினர் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

------------

சென்னை பெருங்குடி மண்டலம் பாலாஜி நகரில் நவீன ஸ்கேட்டிங் மைதானம் அமைக்கப்பட்டுள்ளதாக மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

உலக பேட்மிண்டன் சாம்பியன் போட்டி புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.

வரும் 23ஆம் தேதி வரை நடைபெற உள்ள இப்போட்டியில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த முன்னணி வீரர் வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

இந்தியா சார்பில் P.V. Sindhu, Gayatri Gopichand, Ayush Shetty, Sathvik Sairaj, Chirag Shetty, Rangi Reddy உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

-----------

கிருஷ்ணகிரியில் மாநில அளவிலான ரோலர் ஸ்கேட்டிங் சாம்பியன் போட்டி நேற்று தொடங்கியது.

இரண்டு நாட்கள் நடைபெறும் இப்போட்டியில் 20க்கும் மேற்பட்ட மாவட்டங்களைச் சேர்ந்த 600 மாணவ மாணவிகள் பங்கேற்றுள்ளனர்.

**<<<< >>>>**